குச்சவெளி பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குச்சவெளி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குச்சவெளி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்@ராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கொடுப்பனவை செலுத்த வேண்டிய சிட்டைகளின் பெறுமதிக்கு பதிலாக ஒப்பந்தத் தொகையினை செலுத்த வேண்டியதாக பதிவு செய்யப்பட்டமையினால் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,837,746 இனால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப் பட்டுள்ளது. | சில்லறைக் கடன்கொடுத்தோர் 2022ம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| ஆ) | 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பாக கிடைக்கப்பெற்ற ரூபா 2,500,000 காப்புறுதித் தொகையானது திரண்ட நிதிக்கணக்கில் சீராக்கப்படாமல், மீளாய் வாண்டின் வருமானமாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் ஆண்டிற்கான இறுதிக்கணக்கறிக்கையில் திரண்ட நிதியில் இருந்து திருத்தப்படும். | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க, கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| இ) | மீளாய்வாண்டின் திரண்ட நிதிக் கணக்கின் ஆரம்ப வரவு மீதி ரூபா 2,056,485 ஆனது பேரேட்டுக் கணக்கில் செலவு மீதியாக கொண்டுவரப்பட்டமையினால்,இறுதி மீதி ரூபா 4,112,970 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் ஆண்டுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் திருத்தம் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிலுவை வருமான கட்டணப் பட்டியல் மற்றும் வருமான செலவுக் கணக்கின் ஆண்டுக்கான வருமானம் என்பவற்றுக்கு இடையே ரூபா 7,592,731 வேறுபாடு இனங்காணப்பட்டது. | வருமானமாக பெறப்பட்ட தொகை மாத்திரம் கணக்குகளில் காட்டப் பட்டுள்ளது. அறவிடப்படாத தொகை நிலுவையாக நிலுவை விபரத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. | வேறுபாட்டினை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு மற்றும் நிலையானசொத்து என்பனவற்றிற்கு இடையே ரூபா 1,658,002 வேறுபாடு இனங்காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டிற்கான இறுதிக் கணக்கறிக்கையில் அத்தவறு திருத்தப்படும். | |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 33,404,860 உருப்படிகள் தொடர்பாக அவற்றின் சரியான தன்மையையும் உறுதிப் படுத்துவதற்கு பட்டியல்கள், வங்கி உறுதிப்படுத்தல், வங்கிக் கூற்று, என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இம் மீதிகள் 10 தொடக்கம் 15 வருடங்களிற்கு மேலாக கணக்குகளில் காட்டபபட்டு வருகின்றது. இவை தொடர்பான ஆவணங்கள் இல்லை. மேலும் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்தாலோசித்து பதிவழிக்க அல்லது சீராக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீதிகளை சீர் செய்வதற்கு மற்றும் உறுதிப் படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் | வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டின் | குறிப்பிட்ட கூற்றை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிக்கு அமைய நடவடிக்கை எடுக்கப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயம்X பிரிவு 193 | விளக்கங்களைஉள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | படல் வேண்டும். |

(ஆ) ஏனைய சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி - 01 ஆம் இலக்க உள்ளுராட்சி சுற்றுநிருபம் | பிரஜைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | இணையத்தின் மூலமாக சேவையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |
| (ii) | 2021.08.16 ஆம் திகதிய PT/03/2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை | பிரதேச சபையின் கீழ் பணியாற்றுகின்ற பாதுகாப்புப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது பாதுகாப்புப் பணம் அறவிட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது | |
| (iii) | தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் சபையினால் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் தயாரிக்கப்படும். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 50,869,884 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 17,530,213 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டின் சபையின் முடிவுக் கணக்குகளில் காட்டப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 220,080,533 தொடர்பாக நிலையான சொத்துப் | உரிய வகையில் சீர் செய்து, ஏனைய அனைத்து நிலையான சொத்துக்களும் | நடைமுறையல்லாச் சொத்து தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு, காணி உறுதி |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடு, காணி உறுதி மற்றும் விபரமான பட்டியல் என்பன முறையாக முகாமையினால் பேணப் பட்டிருக்கவில்லை. இதனால் இவற்றின் பௌதீக இருப்பை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | நிலையான சொத்துப் பதிவேட்டில் தற்போது பேணப்பட்டுள்ளது.. | மற்றும் விபரமான பட்டியல் என்பன உரிய முறையில் பேணப்பட வேண்டும். |
| ஆ) | கௌரவ ஆளுநர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சேதனப் பசளை தயாரித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு 01 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்த போதும், சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனை என்பன மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் இச் செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,000,000 செலவு வினைத்திறன் அற்றதாகக் காணப்படுகின்றது. | சேதனப் பசளைகள் தயாரிப்புக்கான குப்பை கூழங்கள் சேகரிக்கப்பட்டு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் சேதனப் பசளை உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 05 விடயங்களுக்காக மாத்திரம் துணைச்சட்டங்கள் விதிக்கப் பட்டிருந்தன. இக்காரணத்தினால் ஏனைய 25 துணைவிதிகள் மூலம் கிடைக்கக்கூடிய வருமானங்களை சபை இழந்துள்ளது. | இனிவரும் காலங்களில் வருமானம் ஈட்டக்கூடிய வழிகள் ஆராயப்பட்டு அதற்கான துணை விதிகள் அனுமதி பெறப்படும். | துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு தேவையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பிரதேச சபையின் தவிசாளரால் 2020.09.10 ஆம் திகதி KUPS/Hire.V/2020 இலக்க கடிதத்தின் கோரிக்கைக்கு அமைவாக தனியார் வாகனமொன்று பெறுகை முறை மூலம் வாடகைக்குப் பெறப்பட்டு மீளாய்வாண்டில் 72,422 கிலோ மீற்றர்கள் பயன்படுத்தியமைக்காக ஓட்டக்குறிப்பு, வெளிச்செல்லுகை (Gate Pass) அனுமதி என்பன இன்றி ரூபா 2,172,672 சபை நிதியின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டமையினால் இவ்வாகனத்தின் பயன்பாட்டின் நம்பகத்தன்மையை கணக்காய்வின் போது அறிய முடியாமல் இருந்தது. | அலுவலக தேவையின் நிமித்தம் வாகனம் வாடகைக்கு பெறப் பட்டது. | பதிவேடுகள் உரிய முறையில் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் சபை நிதியினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளிற்காக ரூபா 2,772,615 பணம் செலவு செய்யப் பட்டிருந்தும், ஒப்பந்தத்தின் அடிப்படையில் முடிவுத் திகதியில் பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்திருக்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டன. | நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சணை மற்றும் பொருட்களின் விலை யேற்றத்தினால் ஒப்பந்தத்தை முடிவுறுத்தி மீள் ஒப்பந்தம் மேற் கொள்வதற்காக சபை அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் செயற்பாடுகளை பூர்த்தியாக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். |
| ஆ) | சபையினால் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்@ர் வீதி மற்றும் வீதி கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,885,083 ஒப்பந்தப் பெறுமதியான 08 வீதி அபிவிருத்தி செயற்பாடுகளை நிறை வேற்றுவதில் காலதாமதம் காணப்பட்டதோடு, இச் செயற்பாடுகளிற்கான முடிவுத் திகதி 2021.12.31 ஆகக் காணப்பட்ட போதும் அத்திகதி வரையான காலத்திற்கு சராசரியாக 40 வீதமான செயற்பாடுகளே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் இது தொடர்பான கால நீடிப்புக்களுக்கான அனுமதியும் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தால் வீதி அபிவிருத்தி மூலம் நன்மை பெற எதிர் பார்க்கும் மக்களிற்கான நலன் உரிய காலப் பகுதியில் கிடைக்காது போயுள்ளது. | இக்பால் நகரில் வடிகான் அமைக்கும் வேலைத் திட்டம் முற்றாக நிறைவு பெற்றுள்ளது. ஏனைய கைவிடப்பட்ட வேலைத் திட்டங்களின் ஒப்பந்தங்களை முடிவுறுத்தவும் குறித்த சன சமூக நிலையங்களை கறுப்புபட்டியலில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் செயற்பாடுகளை பூர்த்தியாக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும் | | |
| ஆரம்ப நிலை மட்டத்தில் 10 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 12 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 22 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஆளணி வெற்றிடத்தினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய அலுவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2021 அக்தோபர் 25 ஆம் திகதி வெளியீடு செய்யப்பட்ட PT/14/2021 ஆம் இலக்க கிழக்கு மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கு எதிராக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தளில் 01 மாதம் 08 நால் தாமதம் ஏற்பட்டிருந்தது. அத்துடன், 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுடன் இணைத்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| புல்மோட்டையில் அமையப் பெற்ற அறுவை மனையினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சபைக்கு எதிராக 2019.07.05 ஆம் திகதி வழக்கு தொடரப் பட்டிருந்தது. இது தொடர்பாக சபையினால் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நீதிமன்ற வழக்கு தொடர்ந் திருப்பதால் தொடர் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது வழக்கு முடிந்ததும் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறுவை மனைகளினால் ஏற்படும் சூழல் பாதிப்பை தவிர்க்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை சபையினால் தயாரித்தல் மற்றும் அது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் நிலை பேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்க உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |